**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -1 ஸ்ரீவைகுண்டம்</u>**

**முன்னிலை திரு.G. ராமசங்கரன்., பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண் -1,(FAC) ஸ்ரீவைகுண்டம்

நீதித்துறை நடுவர் எண் -2 ,ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண். 122/2019

(CNR.No. TNTT 09003395 2019)

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

முறப்பநாடு காவல்நிலையம்,

குற்ற எண் : 09/2019. ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. முருகன் (வயது 34/2019)

த/பெ. சுடலைமணி,

1/83, வடக்கு தெரு,

வல்லக்குளம். ...எதிரி.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 27.04.2019 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.10.2025 ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை 2 ம் நிலை உதவி வழக்கறிஞர் திருமதி.M.செய்தலி பாத்திமா அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.அரிகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாத உரைகள் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

RAMASANKARAN Digitally signed by RAMASANKARAN Date: 2025.10.17 18:00:02 +0530

## தீர்ப்புரை

2. கடந்த 18.01.2019 ம் தேதி 09.00 மணிக்கு சாட்சி 1 பரியபெருமாள் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி செல்லும் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக முருகன்புரம் விலக்கில் செல்லும்போது, அங்கு நின்ற எதிரி முருகன் சாட்சி 1 ஐ வழிமறித்து சாட்சி 1 ஐ பார்த்து புண்ட மவனே நான் நிக்கிறேன் நீ பைக்கில் வேகமா ஹாறன் அடிச்சுக்கிட்டே போற நீ என்ன பெரிய சுன்னியால தேவிடியா மவனே என அசிங்கமாக பேசியும் சாட்சி 1 எதிரிகளை பார்த்து அசிங்கமாக பேசாதே என்று கூறியும் எதிரி மீண்டும் சாட்சி 1 ஐ பார்த்து என்னையே எதிர்த்து பேசுறீயால தேவிடியாமவனே என்று அசிங்கமாக பேசியும் எதிரி சம்பல இடத்தில் கிடந்த கட்டையை எடுத்து சாட்சி 1 ஐ அடிக்க வரவும் சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்த சாட்சி 2 ராஜாவும் சாட்சி 3 பண்டாரமும் சேர்ந்து எதிரியை சத்தம் போடவும் எதிரி முருகன் சாட்சி 1 ஐ பார்த்து இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைகிருந்தாலும் உன்னை அடிச்சு கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றுள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(2) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று முறப்பநாடு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். மேற்படி எதிரிக்கு வழக்கின் ஆவணங்கள் கொடுக்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுக 341, 294(b), 506(2) இதச ன் கீழ், குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி கேட்டபோது எதிரி மறுத்தார். எனவே அரசுதரப்பு சாட்சியம் விசாரிப்பதற்காக ஒத்திவைக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

## அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்தின் சுருக்கம்

RAMASANKARAN Digitally signed by RAMASANKARAN Date: 2025.10.17 18:00:13 +0530

5. அ.சா.1 திரு. பரியபெருமாள் தனது சாட்சியத்தில், சாட்சிகள் ராஜா, பண்டாரம் ஆகியோர்களை தெரியும் என்றும் இவ்வழக்கின் எதிரியை தெரியாது என்றும் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் காலை 09.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர் தன்னிடம் பிரச்சனை செய்தார் என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் போலிசில் புகார் கொடுத்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றும் தற்போது எதிரியுடன் யாருடைய வற்புறுத்தலும் இன்றி சமாதானமாக செல்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 திரு. ராஜா தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியாது என்றும் இவ்வழக்கின் எதிரியை தெரியாது என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 திரு. பண்டாரம் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியாது என்றும் இவ்வழக்கின் எதிரியை தெரியாது என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 திரு. அனந்தமுத்துராமன் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 18.01.2019 ம் தேதி 10.00 மணிக்கு முறப்பநாடு காவல் நிலையத்தில் திரு.புஷ்பலிங்கம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது வல்லநாட்டை சேர்ந்த வேல்மயில் மகன் பரியபெருமாள் என்பவரிடம் புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 09/2019 சட்டப்பிரிவு 341, 294(b), 506(ii) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தபட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்றும் பின்பு சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் 18.01.2019 ம் தேதி 15.00 மணிக்கு தெய்வசெயல்புரம் பஸ்ஸ்டாப்பில் வைத்து எதிரியை கைது



RAMASANKARAN Digitally signed by RAMASANKARAN Date: 2025.10.17 18:00:21 +0530

செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலும் நீதிமன்றம் அனுப்பியதாகவும் பின் விசாரணையை முடித்து உம்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசுதரப்பு சாட்சியத்தின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிரான சாராம்சங்கள் குறித்து கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது எதிரி பொய்வழக்கு என்று மறுத்து கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா என வினவியபோது இல்லை என்று கூறினார்.

**இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதா? என்பதே ஆகும்.**

10. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி முருகன் சாட்சியை வழிமறித்து அசிங்கமாக பேசியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அரசு தரப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. அ.சா.1 திரு. பரியபெருமாள் தனது சாட்சியத்தில், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் காலை 09.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர் தன்னிடம் பிரச்சணை செய்தார் என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் போலிசில் புகார் கொடுத்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றும் தற்போது எதிரியுடன் யாருடைய வற்புறுத்தலும் இன்றி சமாதானமாக செல்கிறேன் என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

12. அ.சா.2 திரு. ராஜா, அ.சா.3 திரு. பண்டாரம் ஆகியோர்களது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள்.

13. அ.சா.4 திரு.அனந்தமுத்துராமன் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், அ.சா.ஆ.3 புகார் மனுவின் அடிப்படையில் அ.சா.ஆ.4


RAMASANKARAN Digitally signed by RAMASANKARAN Date: 2025.10.17 18:00:27 +0530

முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் பின்பு அவர் விசாரணை நகலை எடுத்துக் கொண்டு, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்பு விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.4 ன் சாட்சியம் புலன்விசாரணை குறித்து மட்டும் புலப்படுகிறது. அ.சா.4 ன் சாட்சியம் எதிரியை குற்ற சம்பவத்துடன் இணைக்கக்கூடிய சாட்சியமாக அமையவில்லை. எனவே எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க போதுமான சாட்சியங்கள் அரசுத்தரப்பினால் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

15. எனவே, எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(2) இதச ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது எதிரிக்கு எதிராக அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

16. முடிவாக எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(2) இதச ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

17. இந்த வழக்கில் சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

18. எதிரி குவிமுச பிரிவு 437A ன் கீழ் எழுதிகொடுத்துள்ள பிணைபத்திரம் ஆறு மாதம் முடிவடைந்த பின்பு தானாக ரத்து ஆகிவிடும்.

// என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்தரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் (17/10/2025) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

RAMASANKARAN

Digitally signed by RAMASANKARAN
Date: 2025.10.17 18:00:35 +0530

(ஒ/ம்)G.ராமசங்கரன்,

நீதித்துறை நடுவர் எண் -I,(FAC)

நீதித்துறை நடுவர் எண் -II,

ஸ்ரீவைகுண்டம்.

**பின் இணைப்பு:**

**அரசுத்தரப்புச் சாட்சிகள்:**

அ.சா.1 திரு. பரியபெருமாள்

அ.சா.2 திரு. ராஜா

அ.சா.3 திரு. பண்டாரம்

அ.சா.4 திரு. அனந்தமுத்துராமன்

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து

அ.சா.ஆ.2 சமாதான மனு

அ.சா.ஆ.3 புகார் மனு

அ.சா.ஆ.4 முதல்தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5 பார்வை மகஜர்

அ.சா.ஆ.6 வரைபடம்

**அரசுத்தரப்பு சான்றுப்பொருள் :-** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

(ஒ/ம்)G.ராமசங்கரன்,

நீதித்துறை நடுவர் எண் -I,(FAC)

நீதித்துறை நடுவர் எண் -II,

ஸ்ரீவைகுண்டம்.

RAMASANKARAN Digitally signed by RAMASANKARAN Date: 2025.10.17 18:00:41 +0530

குறிப்பு:

1. எந்த ஒரு சாட்சியையும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கவில்லை.
2. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

RAMASANKARAN

Digitally signed by RAMASANKARAN
Date: 2025.10.17 18:00:46 +0530